## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 46. சாத்வீக ராஜ்

---

மனிதனுக்குள் மூன்று விதமான குணங்கள் உள்ளன. ஒன்று ரஜோ குணம் - மிகவும் கோபம், முரட்டுத் தன்மை மற்றும் பிடிவாத குணம் இதுவாகும்.

அடுத்து தாமச குணம் - மிகவும் சோம்பலான தன்மை இதுவாகும். அடுத்து இருப்பது சாத்வீக குணம் - ஊக்கமும் உற்சாகமும் அமைதியும் உயர் பண்புகளும் இதுவாகும்.

மனிதன் மூன்றாவது பண்பைப் பெற ஆன்மீகப்பயிற்சிகள் அவசியம்.படிப்படியே மனிதன் தன் குணத்தை மாற்றிட வேண்டும்.அப்படி மாற்றிக் கொள்ளாத போது, அவனுக்கும் அவனைச் சேர்ந்தாருக்கும் மிக்க துன்பமே வரும்.இதைப் புராண - இதிகாசங்கள் உணர்த்துகின்றன.

இவ்வரலாற்றில் வரும் ராஜன் நாம் தான்.இவன் ரஜோ குணத்தில் இருந்து தாமச குணத்திற்கு வந்து அதையும் மாற்றிக் கொண்டு உயர்ந்த சாத்வீகனாக மாறி மக்கள் பணி செய்வதை அறிகிறோம்.

**வலது கை - இடது கை**

பாரத தேசத்தில் அனைத்து உயர்ந்த வினைகளையும் வலது கை கொண்டே செய்வோம்.காரணம் வலது கை விழிப்புணர்வுடன் கூடிய அறிவின் பகுதியை மூளையுள் இணைத்துக் கொண்டு செயல்படுகின்றது.இடது கை மிக்க உணர்ச்சிப்பகுதியுடன் இணைந்தது.

இவ்வரலாற்றில் மன்னன் தன் இடது கையை வெட்டிக் கொள்கிறான் என்று கூறப்படுகிறது.அப்படி என்றால் அவன் மிக்க உணர்ச்சிக்கும் கண்மூடித்தனமான உணர்வுக்கும் பிணைப்பான தன் மனதை அதிலிருந்து விடுபட்டு ஞானத்துடன் சேர்த்துக் கொண்டான் என்றே அர்த்தம் கொள்க.அதை மீறி body level ரீதில் தன் கையை வெட்டுக் கொண்டும் இருக்கிறான்.

**உடலை வருத்திக் கொண்டு ஆன்மீக சாதனை செய்யலாமா?**

தன் வ்யாதிக்குக் காரணமான நாக்கை அரிந்து குளத்தில் வீசிய ஒரு முருக அடியாரின் வரலாற்றைச் சென்னை வடபழனி ஸ்தலபுராணம் கூறும்.

உடலின் ஒரு பாகத்தைத் துண்டிப்பது, சோதிப்பது என்பதை BMIAC LEVELSவைத்துப்

பார்க்க வேண்டும். சூர்ப்பணகையின் மூக்கை வெட்டினான் ராமன் என்றால், "பிற ஆண் மீது காம இச்சை கொள்ளும் பழைய ஜென்ம வாசனையை அவன் அறுக்க வைத்தான்" என்று பொருள் கொள்க.

கோயில் வழிபாடுகளும் விழாக்களும் வெறும் புலன் சுகத்தை எண்ணி மக்களால் தவறாகக் கையாளப் படும் இக்காலத்தில் இவ்வரசன் ஒரு உதாரணமாகிறான்.

**பூரி மன்னனின் பூரிப்பு**

பூரியை ஆட்சி செய்த சாத்வீகன் அன்று ஏகாதசியை முன்னிட்டு ஜகன்நாதரை தரிசிக்க வருகிறான்.கோயிலில் அலங்காரம் நடைபெறும் வேளை, அப்போது அவனுடன் வந்த சில தோழர்களுடன் சேர்ந்து ஒரு ஓரத்தில் தாயம் ஆடத் தொடங்கினான். [இறை உணர்வு பெறும் பொறுமையும் கவனம் மாறாத தன்மையும் சாதகனுக்கு அவசியம்]

அலங்காரம் முடிந்து தீபாராதனை செய்ய அர்ச்சகர்கள் மன்னனை அழைத்தும் அவன் வரவில்லை. பூஜை தொடர்ந்து முடிகிறது.அப்போதும் தாயம் ஆடுவதில் ஸ்ரத்தையுடன் இருந்த ராஜா கவனம் பூஜைக்குச் செல்லவில்லை.[**இதைப் போல் வாழ்வில் பலர் எடுத்த காரியத்தை விட்டுவிட்டு வேறு ஒன்றில் லயித்துப் போவதையும் காண்க**]

கோயில் மூடி தருவாயில் அர்ச்சகர் ஒருவர் பவ்யமாக அரசனுக்கு மரியாதை செய்ய வருகிறார், ப்ரசாதம் தர வரும் போது அவன் கவனக்குறைவால் இடது கையை நீட்ட, அர்ச்சகர் தராமல் போய் விடுகிறார்.இதை உணர்ந்த அரசன் தன் தவற்றை எண்ணி வருந்தினான்.

தன் உணர்ச்சிமிக்க விளையாடினால் தெய்வீக உணர்வில் புக முடியாமல் வீணான நாளை எண்ணி எண்ணி வருந்தினான்.அதற்கு பதில் தன் இடது கையை வெட்டிப் போட முடிவு செய்தான்.

**அமைச்சர் வெட்டிய கை**

இரவில் அமைச்சரிதம் தன் அறைக்குள் திருடன் அடிக்கடி வருவதாகவும், அன்று வரும் போது அவன் கையை வெட்டுமாறும் உத்தரவு இட்டான்.[அமைச்சர் என்ற ஞானம் கொண்ட குரு அருளால் உணர்ச்சியைக் கடக்க வேண்டும், அதுவே இடது கையை அமைச்சர் வெட்டும் உட்கருத்து]

இரவில் அரசனின் அறைக்குள் அரசனே திருடன் போல் வர, அமைச்சர் கண்ணை

மூடிக்கொண்டு இடது கையை வெட்டினார்.

மறுநாள் தான் அமைச்சருக்கும் உண்மை தெரிய அவர் அரசனின் சாதனை எண்ணி அமைதியாக ஏற்றுக் கொள்கிறார்.

கையை இழந்த சாத்வீகன் அக்கையை ஒரு தட்டில் வைத்து ஜகன்நாதர் கோயில் வாசல் முன் வைத்து வழிபட, அப்போது அவனது மாற்றத்துக்கான கடுமையான ஆன்மீகச் சாதனையை உணர்ந்த ஒரு ஸ்ரத்தையான அர்ச்சகர், ப்ரசாதத்தை மிக்க விழிப்புணர்வுடன் தர அதை வாங்க வலது கையை நீட்டிட அவன் இடது கையும் மக்கள் பார்க்க வளர்ந்தது.

நல்ல ஞானமும் ஆன்மீக உணர்வும் உள்ள அரசன் ஊரில் வாழும் மக்களுக்கு என்ன குறை?

ஹரி ஓம்!